பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 09 2025 MONDAY 12.40 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கரூரில் கூட்டநெரிசல் துயர சம்பவம் நிகழ்ந்த இடத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று பார்வையிட்டார்.
- பிரதமரின் கிராமப்புற விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஜம்மு காஷ்மீரின் கிஸ்துவார் முன்னோடி மாவட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.
- பிரதமரின் E-Drive திட்டத்தின்கீழ், 72 ஆயிரத்து 300 மின்சார வாகன சார்ஜிங் மையங்கள் அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- நாட்டின் பால் உற்பத்தி கடந்த பத்தாண்டுகளில் 63 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- அணுசக்தி ஒப்பந்தத்தை புதுப்பிக்க தவறிய ஈரான் நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள தடை தொடரும் என ஐ நா அறிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

தமிழகத்தின் கரூர் கூட்ட நெரிசல் துயர சம்பவம் நிகழ்ந்த இடத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று காலை நேரில் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகனும் அவருடன் பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளிடம் இந்த சம்பவம் குறித்து நிதியமைச்சர் கேட்டறிந்தார்.

பின்னர், கரூர் அரசு மருத்துவமனைக்கு சென்ற திருமதி நிர்மலா சீதாராமன், கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இதனிடையே, இந்த சம்பவம் குறித்து மாநில அரசால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் தலைவர் திருமதி அருணா ஜெகதீசன் இரண்டாவது நாளாக பல்வேறு தரப்பினரிடம் விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

<<<<<<>>>>>>

பிரதமரின் கிராமப்புற விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், முன்னோடி வேளாண் மாவட்டமாக ஜம்மு காஷ்மீரில் உள்ள கிஸ்துவார் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கிராமப்புறங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வேளாண் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த திட்டம், இந்த துறைக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும் என்று கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள பிரதமரின் கிராமப்புற விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் ஆறு ஆண்டுகளில் 100 முன்னோடி வேளாண் மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு, வேளாண் சார்ந்த தொழில்கள் மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த திட்டத்தின்கீழ், குறைந்த வேளாண் உற்பத்தி உள்ள இடங்களில் விஞ்ஞானப்பூர்வமாக ஆய்வு நடத்தி, மண் வளம் உள்ளிட்டவற்றை மேம்படுத்தி, வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், விவசாயிகளுக்கு குறுகியகால கடன்கள் வழங்கப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

பிரதமரின் E-Drive திட்டத்தின்கீழ், 72 ஆயிரத்து 300 மின்சார வாகன சார்ஜிங் மையங்கள் அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக கனரக தொழில்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் பொது இடங்களில் சார்ஜிங் செய்யும் மையங்களுக்கு மானியம் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

அரசு அலுவலகங்கள், நெடுஞ்சாலைகள், பொது போக்குவரத்து மையங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட இடங்களில் மின்சார வாகன சார்ஜிங் மையங்களை அதிக அளவில் அமைப்பதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் கொண்டுவரப்பட்டுள்ளது.

*அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், குடியிருப்புகள் ஆகிய இடங்களில் அமைக்கப்படும் சார்ஜிங் மையங்களுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், பேருந்து முனையங்கள், மெட்ரோ ரயில் நிலையங்கள், வாகன நிறுத்துமிடங்கள், சுங்கச்சாவடிகள் உள்ளிட்ட இடங்களில் அமைக்கப்படும் சார்ஜிங் மையங்களுக்கும் மானிய உதவி வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*பீஹார் மாநிலத்தில் இருந்து இன்று 7 புதிய ரயில் சேவைகளை ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைக்கிறார்.*

*பாட்னா ரயில் நிலையத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் 3 அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் மற்றும் 4 பயணியர் ரயில் சேவைகளை தொடங்கி வைக்க இருப்பதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.*

*இதன்படி முசாஃபர்பூர்-ஹைதராபாத், Darbhanga-Madar, Chhapra-Delhi Ananth Vihar ரயில் நிலையங்களுக்கு இடையே அம்ரித் பாரத் ரயில்கள் இயக்கப்பட உள்ளது.*

*அதேபோன்று Patna - Buxar, Danapur - Jhajha, Nawada-Patna மற்றும் Islampur-Patna இடையே 4 பயணியர் ரயில் சேவைகள் இயக்கப்பட உள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*இந்தப் புதிய ரயில் சேவைகள் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு பேருதவியாக இருக்கும் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.*

*<<<<<<>>>>>>*

*நாட்டில் பால் உற்பத்தி கடந்த பத்தாண்டுகளில் 63 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*பத்தாண்டுகளுக்கு முன்பு 146 மில்லியன் டன்னாக இருந்த பால் உற்பத்தி, தற்போது 239 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது.*

*பால் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளது.*

*ஒட்டுமொத்த உலகின் பால் உற்பத்தியில், 25 சதவீதம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது.*

*நாட்டின் பொருளாதாரத்தில் ஐந்து சதவீதம் பால் உற்பத்தி பங்கு வகிப்பதாக மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*பால் உற்பத்தியில் எட்டு கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள் வேலைவாய்ப்பை பெற்றுள்ளளனர்.*

*பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட, நாட்டில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பாலின் அளவு உயர்ந்துள்ளது.*

*கடந்த ஆண்டில் கிடைத்த புள்ளிவிவரங்களின்படி, நாட்டில் ஒவ்வொருவருக்கும் சராசரியாக 471 கிராம் பால் கிடைக்கிறது.*

*இது, உலக சராசரியைவிட அதிகம் என்று மத்திய பால்வளத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*உலகில் சராசரியாக ஒரு நபருக்கு 322 கிராம் பால் மட்டுமே கிடைத்து வருவதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.*

*<<<<<<>>>>>>*

*தில்லி தீன்தயாள் உபாத்யாயா மார்க் பகுதியில் கட்டப்பட்டுள்ள தில்லி பிரதேச பிஜேபியின் புதிய அலுவலக கட்டிடத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று திறந்து வைக்கிறார்.*

*நவராத்திரி பண்டிகை காலத்தில் பிஜேபி அலுவலகம் திறக்கப்படுவதற்கு தில்லியில் உள்ள அக்கட்சி தொண்டர்களின் வரவேற்பை பெற்றுள்ளதாக அக்கட்சியின் தில்லி தலைவர் திரு வீரேந்திர சச்சுதேவா தெரிவித்துள்ளார்.*

*அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், பிஜேபி அலுவலகம் மட்டுமாக இது செயல்படாமல், நாட்டின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் விதமாகவும் திகழும் என்று தெரிவிததார்.*

*தில்லி அரசியலில் வரலாற்று சிறப்பு மிக்க நாளாக பிஜேபி புதிய அலுவலகம் திறக்கப்படுவதாகவும் அவர் கூறினார்*

*இந்நிகழ்ச்சியில், பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, கட்சியின் மூத்த தலைவர்கள் நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோரும், ஆயிரக்கணக்கான தொண்டர்களும் பங்கேற்கின்றனர்.*

*<<<<<<>>>>>>*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களுக்கு பல்வேறு தரப்பினர் இடையே பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது.*

*மக்கள் அதிகம் வாங்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கான வரிகள் குறைக்கப்பட்டுள்ளதால், விலைவாசி குறைந்து வருவதாக தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.*

*<<<<<<>>>>>>*

*நவராத்திரி பண்டிகையின் ஏழாம் நாளான இன்று மகா சப்தமி கொண்டாடப்படுகிறது.*

*இந்நாளையொட்டி, பக்தர்கள் புனித நீராடி துர்க்கையை வழிபடுகின்றனர்.*

*தீமைகளை வெல்வதற்கான வலிமையையும், தைரியத்தையும் அளிக்கும் விழாவாக மகா சப்தமி கொண்டாடப்படுகிறது.*

*ஆன்மிகத்தின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையையும், நேர்மறையான சிந்தனைகளையும் உள்ளடக்கி, மகிழ்ச்சியோடு கொண்டாடும் விழாவாக மகா சப்தமி நவராத்திரி திருவிழா அமைந்துள்ளது.*

*<<<<<<>>>>>>*

*அணுசக்தி ஒப்பந்தத்தை புதுப்பிக்க தவறிய ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடை தொடரும் என்று ஐ நா சபை அறிவித்துள்ளது.*

*ஐ நா பாதுகாப்பு சபையின் தீர்மானத்தின்படி, ஈரான் நாட்டை சேர்ந்த 43 தனிநபர்கள் மற்றும் 78 நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடுகள் ஈரான் மீதான பொருளாதார தடைகளை தொடர வேண்டும் என வலியுறுத்தியிருந்தன.*

*<<<<<<>>>>>>*

*டென்மார்க் தலைநகர் Copenhagen-னில் ஐரோப்பிய யூனியனின் உச்சிமாநாடு நடைபெறுவதையொட்டி, அப்பகுதியில் ட்ரோன்கள் பறக்கவிடுவதற்கு ஒருவாரம் முன்னதாகவே தடை விதிக்கப்பட்டுள்ளது.*

காவல்துறையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் குழப்பங்கள் ஏற்படுவதை தடுப்பதற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

குஜராத், சௌராஷ்ட்ரா. கட்ச், கொங்கன் மற்றும் கோவா மத்திய மகாராஷ்ட்ரா பகுதிகளில் இன்று கனமழை முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ஆசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் 400 மீட்டர் தனிநபர் Medley பிரிவில் இந்தியாவின் Saanvi-யும், Advait-யும் இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

50 மீட்டர் Free Style பிரிவில் Rajula மற்றும் Jashua-வும், 50 மீட்டர் Breast Stroke பிரிவில் Rithvika, Vidith மற்றும் Yadesh-யும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<>>>>>>